உளுந்து கொள்முதல்: விவசாயிகள் விளைவித்த உளுந்து பயிரை, குறைந்தபட்ச ஆதரவு விலையான ரூ.78-க்கு கொள்முதல் செய்திட அரசு உத்தரவிட்டுள்ளது. இக்கொள்முதல் கடந்த டிசம்பர் 26-ம் தேதி தொடங்கியது. மார்ச் 25-ம் தேதி வரை நடைபெறும்.

நினைவு நாள்: இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருதை, கர்நாடக இசைப்பாடகி எம்.எஸ்.சுப்புலட்சுமிக்குப் பிறகு பெற்ற இரண்டாவது பெண் பாடகி என்ற பெருமைக்குரியவர் லதா மங்கேஷ்கர். இவரது நினைவு நாள் இன்று.

எஸ்.ஐ. தேர்வு முடிவு விரைவில் வெளியீடு

உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தகவல்

மதுரை

காவல் உதவி ஆய்வாளர் (எஸ்.ஐ) பணித் தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிடப்படும் என்று உயர் நீதிமன்றத்தில் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தென்காசியைச் சேர்ந்த குருசாமி, ஆனந்தராஜா ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் எஸ்.ஐ. பணியிடங்களை நிரப்புவதற்கான தேர்வை கடந்த ஆண்டு டிச. 21-ல் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் நடத்தியது. இதில் பிரிவு-பி பாடத் திட்டத்தில் குறிப்பிட்டபடி தமிழ் வினாக்கள் இடம் பெறவில்லை. அதற்குப் பதிலாக, உளவியல் பகுதியில் இருந்து 10 வினாக்கள் கூடுதலாகக் கேட்கப்பட்டிருந்தன.

எனவே, எஸ்.ஐ. பணித் தேர்வு முடிவை வெளியிடத் தடை விதித்தும், தேர்வை ரத்து செய்து, மீண்டும் நடத்தவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில், "தமிழில் இருந்து வினாக்கள் கேட்கப்படவில்லை. இருப்பினும் தேர்வு முடிவு வெளியிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு சமூகப் பிரிவுக்கான 'கட் ஆஃப்' மதிப்பெண் குறிப்பிடாமல், ஒட்டுமொத்தமாக முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன" எனக் கூறப்பட்டது.

அரசுத் தரப்பில், "தேர்வு முடிவுகளில் தவறுகள் இருந்ததால் திரும்பப் பெறப்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து விளக்கம் அளிக்குமாறு அரசுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த மனு நீதிபதி பி.புகழேந்தி முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அரசுத் தரப்பில், எஸ்.ஐ. தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. பின்னர் நீதிபதி, "மனு தொடர்பாக சீருடைப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் விரிவான பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும்" என்று உத்தரவிட்டு, விசாரணையை வரும் 12-ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

தூத்துக்குடியில் ரூ.516 கோடியில்

புதிய கூட்டு குடிநீர் திட்டம் தொடக்கம்

தூத்துக்குடி

தூத்துக்குடி, ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம், புதூர், கோவில்பட்டி, கயத்தாறு ஆகிய 6 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 363 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது. பணிகள் முடிவடைந்ததை தொடர்ந்து இதன் தொடக்க விழா நேற்று நடைபெற்றது. சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்தவாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக திட்டத்தை தொடங்கி வைத்தார்.

தூத்துக்குடி மாவட்டத்துக்கான புதிய கூட்டுக் குடிநீர் திட்டத்தை ஆட்சியர் க.இளம்பகவத் பார்வையிட்டார்.

தூத்துக்குடி மாவட்டம், வடவல்லநாடு ஊராட்சிக்கு உட்பட்ட சேதுராமலிங்கபுரம் பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திட்டத்தை மக்கள் பயன்பாட்டுக்கு ஆட்சியர் க.இளம்பகவத் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம் 363 ஊரக குடியிருப்புகளை சேர்ந்த 3.47 லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஜி.வி. மார்க்கண்டேயன், எம்.சி.சண்முகையா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை பொறியாளர் மு.கணேஷ், கிராம குடிநீர் திட்ட நிர்வாக பொறியாளர் ராஜா, உதவி நிர்வாகப் பொறியாளர் மகேஷ்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சாந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கோவில்பட்டி அருகே

ஆவல்நத்தம் இளைஞர் கொலையில் 3 கைது

கோவில்பட்டி

கோவில்பட்டி அருகே ஆவல்நத்தம் கிராமத்தில் நடந்த கொலை தொடர்பாக அதே ஊரைச் சேர்ந்த 3 பேரை போலீஸார் கைது செய்தனர்.

கோவில்பட்டி அருகே ஆவல்நத்தம் கிராமத்தைச் சேர்ந்த முத்துராஜ் மகன் கார்த்திக் (28). கூலி வேலை செய்து வந்தார். இவரது தாய் சக்கம்மாள். நேற்று முன்தினம் இரவு கிராமத்துக்கு அருகே உள்ள கோயில் பகுதியில், அதே ஊரைச் சேர்ந்த வேல்முருகன் மற்றும் சிலர் அமர்ந்து மதுபானம் அருந்தியுள்ளனர். அவர்களை சக்கம்மாள் கண்டித்துள்ளார். இதனால், அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

சிறிதுநேரத்தில் அப்பகுதியில் இருந்து மது அருந்தி விட்டு கார்த்திக் வந்துள்ளார். இதை பார்த்த வேல்முருகன் (32), அவரது தம்பி அய்யாத்துரை (28), முனியசாமி (35) ஆகியோர் சேர்ந்து, 'கோயில் அருகே அமர்ந்து மதுபானம் அருந்தக் கூடாது என உனது தாய் எங்களை கண்டித்தார். உனக்கு மட்டும் விதிவிலக்கா?' என கேட்டுள்ளனர். அப்போது அவர்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

ஆத்திரமடைந்த வேல்முருகன் உள்ளிட்ட 3 பேரும் சேர்ந்த கற்களால் கார்த்திக்கை தாக்கி உள்ளனர். இதில், கார்த்திக் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய போலீஸார் விசாரணை நடத்தி, வேல்முருகன், அய்யாத்துரை, முனியசாமி ஆகிய 3 பேரையும் கைது செய்தனர். கார்த்திக்குக்கு திருமணமாகி மனைவி சுபலட்சுமி, 2 பெண் குழந்தைகள் உள்ளனர்.

இந்தியன் வங்கி Indian Bank
இன்வெஸ்டார் சர்வீசஸ் செல், கார்ப்பொரேட் அலுவலகம், 254-260, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014

பொது அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட கீழ்க்கண்ட பங்குப் பத்திரம்(கள்) தொலைந்து அல்லது தவற விடப்பட்டு அல்லது திருடப்பட்டிருப்பதாகவும் அந்த பங்குப் பத்திரங்களில் பதியப்பட்ட உரிமையாளர்கள் அந்த பத்திரங்களுக்கு பதிலாக நகல் பங்குப் பத்திரம்(கள்) வழங்குமாறு வங்கியிடம் விண்ணப்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	பங்குதாரரின் பெயர்	ஃபோலியோ எண்	பங்குகளின் எண்ணிக்கை	பத்திர எண்	தனித்துவமான எண் இருந்து	தனித்துவமான எண் வரை
1.	பிரநெஸ்ப்ரிதி மன்டல்	00017394	23	17409	609048638	609048660
2.	ஷியோ குமார் (ஷிவ் குமார் ஜெய்ஸ்வால்)	00041351	207	41366	610161558	610161764
3.	ஜனார்தன் பேனர்ஜி	00012121	11	12136	608971678	608971688
4.	ரோஷன் குமார் சா	00027042	34	27057	609356392	609356425
5.	அருண் பரன் மித்ரா JT: அஷிட் பரன் மித்ரா	00010785	11	10800	608956982	608956992
6.	சிதேஷ் சந்திரா பேனர்ஜி (இறந்தவர்) JT: ஷியாமா பிரசாத் பேனர்ஜி	00039210	69	39225	609988820	609988888
7.	பிரபாகர் A S	00027804	34	27819	609382094	609382127
8.	துர்கா ராவ் V	24472	34	24487	609269132	609269165
9	சாபித்ரி தேவி (சாவித்ரி தேவி)	00038167	69	38182	609917235	609917303
10.	உமா நாராயணன் Jt1: நாராயணன்	00000187	11	202	608801395	608801405
11.	முகமது அஷ்ரத்	00036927	57	36942	609836884	609836940
12.	முகமது அன்வர்	00036928	57	36943	609836941	609856997
13.	உஸ்மா பெர்வீன் (உஸ்மா பர்வீன்)	00029868	46	29883	609465297	609465342
14.	நாக ராஜேந்திர குமார் ரெட்டி K	00028438	34	28453	609403581	609403614
15.	சுதிர் குமார் ஜெயின்	00034955	57	34970	609724662	609724718
16.	ராஜேந்திர பிரசாத் கனோஜியா	00022081	34	22096	609188056	609188089

மேற்கூறிய பங்குப் பத்திரம்(கள்) சம்பந்தமாக யாருக்கேனும் ஏதேனும் உரிமை கோருவதாக இருப்பின் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்படும் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்றம் செய்யும் ஏஜென்டிடம், அதாவது **கேமியோ கார்பொரேட் சர்வீசஸ் லிமிடெட்,** மின்னஞ்சல்: **investor@cameoindia.com** என்ற முகவரியில் உரிமைகோர வேண்டும். இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்கு மேல் வரும் எந்த உரிமை கோரலும் அனுமதிக்கப்பட மாட்டாது. பதிவாளர் நகல் சான்றிதழ்(கள்) வழங்கத் தொடர்வார்.

இந்தியன் வங்கி

இடம் : சென்னை
தேதி : 05.02.2026

தினா நாத் குமார்
உதவி பொது மேலாளர் & நிறுவனச் செயலாளர்

காங்கிரஸ் கட்சி கூட்டம்

கோவில்பட்டி

கோவில்பட்டி சட்டப்பேரவை தொகுதி காங்கிரஸ் கட்சி கூட்டம் நேற்று நடந்தது. கட்சியின் வடக்கு மாவட்டத் தலைவர் க.பெருமாள்சாமி தலைமை வகித்தார்.

'பிப்.10-ம் தேதி டெல்லியில் காங்கிரஸ் கட்சி தலைமை அலுவலகத்தில் தமிழகத்தைச் சேர்ந்த மாவட்ட தலைவர்களுக்கான கூட்டம் நடக்கிறது. அதன் பின்னர் கட்சி பொறுப்புகள் நியமனம், தேர்தல் பணிகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் 10 நாட்கள் பயிற்சியும் நடைபெற உள்ளது' என தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, மாவட்ட, நகர, வட்டார பதவிகளுக்கான விருப்ப மனு பெறப்பட்டது. நகரத் தலைவர் அருண் பாண்டியன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

ஒன்றிய திமுக செயற்குழு கூட்டம்

கோவில்பட்டி

கோவில்பட்டி மத்திய ஒன்றிய திமுக செயற்குழு கூட்டம் கட்சி அலுவலகத்தில் நடந்தது. மத்திய ஒன்றிய திமுக செயலாளர் முருகேசன் தலைமை வகித்தார். பிப்.7-ம் தேதி காரியாப்பட்டியில் நடைபெறவுள்ள திமுக தென்மண்டல இளைஞரணி மாநாட்டில், திரளானோர் பங்கேற்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. மேலும், சட்டசபை தேர்தலையொட்டி கட்சி நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

பண்ணை குட்டை அமைக்க முழு மானியம்

பிப்.15-க்குள் விண்ணப்பிக்க அழைப்பு

தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

விளாத்திகுளம், புதூர், ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி, கயத்தாறு ஆகிய வட்டாரங்களில் இதுவரை, 100 பண்ணைக் குட்டைகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. மழை நீரை, விவசாய நிலங்களிலேயே பண்ணைக் குட்டைகளில் சேகரித்து பாசன நீராக பயன்படுத்துவதால் வேளாண்மை உற்பத்தி திறன் அதிகரிப்பதோடு, பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்த்து கூடுதல் லாபமும் பெறலாம்.

பண்ணைக் குட்டைகள் அமைக்க விருப்பம் தெரிவித்த விவசாயிகளின் நிலங்களில், நீர் வழிந்து ஓடக்கூடிய தாழ்வான பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு உடனடியாக பண்ணைக் குட்டை அமைக்கப்படும். பண்ணைக் குட்டை அமைக்க சிறு, குறு விவசாயிகளும் விண்ணப்பிக்கலாம். விவசாயிகளின் விருப்பத்துக்கு ஏற்ப தேவைப்படும் சிறிய, பெரிய அளவிலான பண்ணைக் குட்டைகள் மண்ணின் தன்மைக்கேற்ப அமைத்து தரப்படும்.

தெளிப்பு நீர்ப்பாசன கருவிகள் அமைக்க சிறுகுறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கப்படும். தெளிப்பு நீர்ப்பாசனம் அமைத்த விவசாயிகளுக்கு ஆயில் மோட்டார் அல்லது மின் மோட்டார் வாங்க 50 சதவீத மானியம் (அதிகபட்ச மானியம் ரூ.15,000), தண்ணீர் கடத்தும் குழாய்கள் வாங்க 50 சதவீத மானியம் (அதிகபட்சம் ஹெக்டேருக்கு ரூ.10,000) வழங்கப்படுகிறது.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.6,6/1,6/2, SF எண்.5/2A, தரைத்தளம், வண்ணார்பேட்டை ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி, தமிழ்நாடு-627002

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்து "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	27.01.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை (EMD)
1649250250000037 1. Mr. விக்னேஷ் மூக்காண்டி 2.Mr. கிருஷ்ணன் M 3. Mrs. செல்வி	(i) 15.03.2025 & 03.03.2025 அன்றுள்ளபடி ₹ 4,99,231/- (ரூபாய் நான்கு லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து இருநூற்று முப்பத்து ஒன்று மட்டும்) (ii) நேரடியான சுவாதீனம் 11.08.2025	₹ 6,56,932.79 (ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்திரண்டு மற்றும் பைசா எழுபத்தொன்பது மட்டும்)	₹ 2,76,075/- (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்தாறாயிரத்து எழுபத்தைந்து மட்டும்)	₹ 27,608/- (ரூபாய் இருபத்து ஏழாயிரத்து அறுநூற்று எட்டு மட்டும்)

சொத்து விவரம் : ஐட்டம் எண்.1: சேரன்மகாதேவி பதிவு மாவட்டம், சேரன்மகாதேவி ஜாயிண்ட்-II சார்-பதிவாளர் அலுவலகம் மற்றும் **சேரன்மகாதேவி கிராம எல்லைக்குட்பட்ட, பழைய நத்தம் சர்வே எண்.186/1 (பகுதி) மற்றும் புதிய நத்தம் சர்வே எண்.1586/6, 1வது வார்டு, தெற்கு 4வது தெரு** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 26 அடி, தெற்கு பக்கம்: 25 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம்: 34 அடி, மேற்கு பக்கம்: 32.25 அடி ஆக **மொத்தம் 831.25 சதுர அடி அதற்கு சமமாக 77.22 சதுர மீட்டர் காலி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மகேஷ் வீடு, தெற்கு: முருகன் வீடு, கிழக்கு: முருகன் நிலம், மேற்கு: ஐட்டம் எண்.II-ல் உள்ள சொத்து மற்றும் கிருஷ்ணன் நிலம்.

ஐட்டம் எண்.2: சேரன்மகாதேவி பதிவு மாவட்டம், சேரன்மகாதேவி ஜாயிண்ட்-II சார்-பதிவாளர் அலுவலகம் மற்றும் **சேரன்மகாதேவி கிராம எல்லைக்குட்பட்ட, பழைய நத்தம் சர்வே எண்.186/1 (பகுதி) மற்றும் புதிய நத்தம் சர்வே எண்.1586/6, 1வது வார்டு, தெற்கு 4வது தெரு** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 31 அடி, தெற்கு பக்கம்: 31 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம்: 6 அடி, மேற்கு பக்கம்: 6 அடி ஆக **மொத்தம் 186 சதுர அடி அதற்கு சமமாக 17.280 சதுர மீட்டர் காலி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: கிருஷ்ணன் நிலம், தெற்கு: முருகன் வீடு, கிழக்கு: தெற்கு வடக்கு தெரு, மேற்கு: ஐட்டம் எண்.I-ல் உள்ள சொத்து.

மேலே குறிப்பிட்டுள்ள சொத்தானது **Mr.விக்னேஷ் மூக்காண்டி**-க்கு சொந்தமானது (உங்களில் எண்.1-ல் உள்ள நபர்).

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 25.02.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
24.02.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	23.02.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டிஜோ ஷாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr. Prabhakaran (Mob: 74182 81709)**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 06.02.2026
இடம்: பெங்களூரு

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபேர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. **கிளை அலுவலகம் :** ஜனா ஸ்மால் பைனான்ஸ் பேங்க், கிளை அலுவலகம் எண்.10, கிருஷ்ணா புரம் காலனி பிரதான சாலை, மகாத்மா காந்தி நகர், மதுரை - 625014.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **ஆன்-லைன் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	04.02.2026 அன்றைய தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	46029420000582	1) திரு. வெங்கடாசலம், த/பெ. சுப்பிரமணியன், 2) திருமதி. அனலினி, க/பெ. வெங்கடாசலம்	10-01-2025	25-03-2025	ரூ.19,29,959/- (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து இருபத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஐந்நூற்றி ஒன்பது மட்டும்)	18.02.2026 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.14,87,000/- (ரூபாய் பதிநான்கு இலட்சத்து எண்பத்தி ஏழாயிரம் மட்டும்)	ரூ.1,48,700/- (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தி எட்டாயிரத்து ஏழுநூறு மட்டும்)	24.02.2026 மாலை 2.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை	23.02.2026, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.10, கிருஷ்ணா புரம் காலனி பிரதான சாலை, மகாத்மா காந்தி நகர், மதுரை - 625014.

பாதுகாப்பு சொத்தின் விவரம் : திருநெல்வேலி பதிவு மாவட்டம், கல்லிடைகுறிச்சி சார் பதிவாளர் அலுவலகம், மனை எண்.8-ல் கட்டப்பட்ட வீடு மற்றும் மேல்மாடி, கதவு எண். 3/99-1 மற்றும் 3/99-2, பரப்பு 1291.66 சதுர அடி (அதாவது 120 சதுர மீட்டர் = 2.96 சென்ட்ஸ்) நத்தம் ச.எண். 46/2, தெற்கு பாப்பன்குளம் கிராமம், அம்பாசமுத்திரம் தாலுகா, திருநெல்வேலி மாவட்டத்திற்கு உட்பட்டது மற்றும் அதன் அனைத்து வசதிகள். **எல்லைகள்: கிழக்கு :** மனை எண்.19, **வடக்கு :** தெற்கு வடக்கு சாலை, **மேற்கு :** தெரு, **தெற்கு :** மனை எண்.7. **அளவுகள்:** கிழக்கு மேற்கு : 12 மீட்டர், தெற்கு வடக்கு : 10 மீட்டர்.

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் **https://bankauctions.in & www.foreclosureindia.com** மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.M. தினேஷ், தொடர்பு எண். 8142000735. Email id: info@bankauctions.in / dinesh@bankauctions.in.**
மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் வினாக்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 6362951653),** தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொகை அத்துடன் வட்டி மற்றும் மற்ற செலவினங்களுடன் செலுத்தலாம், தவறினால் சொத்தானது விற்பனை செய்யப்படும் மற்றும் ஏதேனும் நிலுவை இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

நாள் : 06.02.2026, இடம் : திருநெல்வேலி
Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

CHANGE OF NAME
I, ANGEL BEULAH GRACLIN J W/o. Justin Prabakaran, was born on 21st December 1984 (Birth Place-Karaikudi, Tamilnadu) residing at CSI St.Pauls Church, Harbour Estate, Thoothukudi 628004, Thoothukudi District, Tamil Nadu State, shall henceforth be Known as, ANGEL BEULAH GRACELIN J
ANGEL BEULAH GRACLIN J
THOOTHUKUDI

CHANGE OF NAME
I, CHRISTY SORNABAI, W/o. Nobleraj Arulmani, was born on 25th August 1984, (BirthPlace - Thoothukudi, Tamilnadu) residing at No.44, Kovil Street, Thoothukudi-628001, Thoothukudi District, Tamil Nadu State, shall henceforth be Known as, CHRISTY
CHRISTY SORNABAI
THOOTHUKUDI

CHANGE OF NAME
I, RAIKANA, W/o. Yaseen, born on: 01 January 1980, (District of Birth: Tirunelveli), residing at No.98, Asrath Bilal Street, Melpalayam, Dist. Tirunelveli - 627 005, shall henceforth be known as RAIGANA.
RAIKANA
Tirunelveli, 05th February 2026.

சுய செய்தி

பெயர்மாற்றம்

CHANGE OF NAME
I, SEYED ALI, S/o. Mydeen Mathar born on 23 March 1975 (District of Birth: Tirunelveli), residing at 116, Alappillai Street, Melpalayam, Dist. - Tirunelveli - 627 005, shall henceforth be known as SYED ALI.
SEYED ALI
Tirunelveli, 05th February 2026.

சுய செய்தி

பெயர்மாற்றம்

CHANGE OF NAME
I, RAJULTAN, S/o. NICOLUS, Born on 07.02.1977, (Native District -Thoothukudi) residing at No.115/7A, Therespuram, Thoothukudi Taluk, Thoothukudi District, Tamil Nadu - 628001, shall henceforth be known as, RAJULDAN N
RAJULTAN
THOOTHUKUDI

ஆட்கள் தேவை

மார்கெட்டிங்

MNC looking for Field Sales Executives for Coimbatore office. Salary PF Incentives. Contact 7558998946

பொது

விற்பனை

பொது

பொது அறிவிப்பு

அசல் நிலம் / சொத்து ஆவணம் காணவில்லை

திருநெல்வேலி மாவட்டம், மகாராஜநகர், செயின்ட் தாமஸ் ரோடு, க.எண்: 6 என்ற முகவரியில் வசித்து வரும் திரு. தொந்தியப்பன் அவர்கள் குமாரர் **இளஞ்செழியன்**(ஆதார் எண் : 3354 8046 7567) மற்றும் **எழில்முருகன்** ஆகிய நாங்கள் இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவித்து கொள்வது யாதெனில், **திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை சார்பதிவக அலுவலகத்தில் 13.12.2018 தேதியன்று எண்: 6422/2018 -ஆக பதிவு செய்யப்பட்ட எங்களுக்கு சொந்தமான அசையா சொத்தின் அசல் கிரைய ஆவணம்**, தொலைந்துவிட்டது. மேற்கண்ட ஆவணத்தினை கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரி அல்லது 94433 53057 என்ற கைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இளஞ்செழியன்

AFFIDAVIT
I, Mrs. **ANDAL R**, Daughter of Govindasamy and wife of Ramanujam, residing at Door No. 31C, Kasthuribai 1st Street, Thilagar Nagar, Kovilpatti, Tuticorin District - 628 502, Tamilnadu. hereby declare that the names **ANDALAMMAL G, G. ANDAL, R. ANDAL** and **ANDAL R** appearing in my records and documents refer to one and the same person, namely myself. My Date of birth is **10.05.1973** and my place of birth is Sattur, Virudhunagar District. I further declare that my correct and official name is **ANDAL R,** as recorded in my Aadhaar Card, as already stated in the affidavit sworn before the Notary Public, Kovilpatti, on 4.2.2026.

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Sri R.Barathan, Indian, Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).